தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 046/ந/2022
நாள்.31.05.2022

திரு. P.B. சிபி,
கூடலூர், நீலகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி பொறியாளர்,
கூடலூர் நகராட்சி.
2) பொதுப்பணி மேலாளர்,
கூடலூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

நீலகிரி மாவட்டம், கூடலூர், ராஜகோபாலபுரம், எண்.4/174, என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.B. சிபி, என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2022 அன்று பெறப்பட்டு 046/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரின் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், கூடலூர், ராஜகோபாலபுரம், எண்.4/174, என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.B. சிபி, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

A tender was conducted by Gudalur Municipality on 23.11.2021 under general fund category. We had found many irregularities in the tender conducted. This tender was called by the officers of Gudalur Municipality on the advise of some politicians. The tender for nearly 62 works worth more than Rs.3.62 crores had been conducted in a secret manner for specific contractors who are very close to those politicians without intimating this to other registered contractors of the Gudalur Municipality nor publishing the advertisement in any of the journals or magazines. This is against the tender framework of the Government. The works are split among those contractors by receiving nearly 10 to 15% of the estimated amount of the work from those contractors. It is to be noted here that the Municipal Engineer and the Overseer are the officers involved in this corrupt practice.

Further, when the Municipal Commissioner Mr.Ashok Kumar was transferred from Gudalur Municipality he handed over the delegation of authority to the Municipal Engineer Mr.Parthasarathy. But Mr.Parthasarathy and Overseer Ms. Sivabakiyam failed

in their duties by working in favour of certain politicians. On the advise of the politicians they issued the work orders on 27.11.2021 for the tender works conducted on 23.11.2021.

A very interesting thing happened in Gudalur Municipality. As per IGFF Scheme, a tender was called for construction of additional office building for Gudalur Municipality on 28.05.2020. This work was allocated to Hamson builders. The ground floor of the building was constructed in the 2020 and the first floor construction was nearly completed in the year 2021. The thing is the tender for leveling of soil for construction of this building had been called on 23.11.2021 and the work order was issued on 27.11.2021 without the knowledge of the builder of that building. This clearly indicates that there are many irregularities in conducting the tender on 23.11.2021.

Moreover the works under general fund category are called for tender against the order of the Commissionerate of Municipal Administration Na.Ka.21627/2021/M3 stating that it is mandatory to get prior permission from the Regional Directorate of Municipal Administration to conduct tenders under general fund category. But the tender had been conducted without any permission from the authority and it is conducted only for the benefit of the Municipal Engineer, Overseer and certain Politicians.

Thus I request you to inquire this issue and take strict actions on those corrupt officials and others involved in this issue.

2) மனுதாரர் அளித்துள்ள புகார் குறித்து மனுதாரரிடம் 10.05.2022 அன்று விசாரணையில் கலந்து கொள்ள அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் 10.05.2022 அன்றைய நேரடி விசாரணையில், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல் காலஅவகாசம் கோரியிருந்தார்.

எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி பொறியாளர் 10.05.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்காணும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் திரு. சிபி என்பவர் இம்முறைமன்றத்திற்கு அளித்த மனுவின் நகல் என்னால் பெறப்படவில்லை. மேலும், மனுதாரர் ஏற்கனவே அதிக அளவில் மனு அளித்துள்ளதால், மனுதாரர் எதை குறிப்பிட்டு மனு அளித்துள்ளார் என்பது குறித்து தெளிவாகத் தெரியாததால், மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள மனுவின் நகலினை எனக்கு அளிக்குமாறும், மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் குறிப்பிடப்படும் மற்றொரு விசாரணை நாளில் மேற்கண்ட மனுதாரரின் மனுவில் கண்டுள்ள புகார் குறித்த அனைத்து விவரங்களையும் இம்மன்றத்தில் அளித்திட அனுமதி அளிக்குமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கால அவகாசம் கோரியிருந்ததை கருத்தில்கொண்டும், எதிர்மனுதாரர் தேவையான தகவல்களை அளித்திட கால அவகாசம் கோரியதைத் தொடர்ந்தும், மேற்கண்ட மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவரையும் 17.05.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) 17.05.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகாமல் அவரது சார்பாக அவரது வழக்கறிஞர் வருகைபுரிந்து மனுதாரர் சார்பாக எழுத்து பூர்வமான அறிக்கையை சமர்ப்பித்தார். அவ்வறிக்கையிலும் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி குறைபாடுகளை தெரிவித்து நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) எதிர்மனுதாரர்களான கூடலூர் நகராட்சி பொறியாளர் மற்றும் கூடலூர் நகராட்சி பொதுப்பணி மேலாளர் ஆகியோர் நேரடி விசாரணைக்கு ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

“கூடலூர் நகராட்சியில் பொது நிதி – 2021–2022 கீழ் ரூ.216.40 இலட்சம் மதிப்பீட்டில் 63 பணிகள் நடத்துவதற்கு முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இவை ஒப்பந்தப்புள்ளி விதிகளை பின்பற்றியே திறக்கப்பட்டன.

அதேபோன்று 15–வது மத்திய நிதிக் குழு திட்டம் 2021–22ன் கீழ் ரூ.257.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் 12.11.2021 அன்று கோரப்பட்டு 23.11.2021 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனை திறப்பதற்கான காலக்கெடு 15 நாட்களாகும். ஆனால், அவசர அவசியம் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ளவிருந்ததாலும், மண்டல இணை இயக்குநரின் வாய்மொழி உத்தரவினாலும், மேற்கண்ட 15 நாள் காலக்கெடுவினை எடுத்துக்கொள்ள இயலவில்லை. மேலும், நகராட்சி ஆணையர் 23.11.2021 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதால், நகராட்சிப் பொறியாளர் 23.11.2021 அன்று பொறுப்பு ஆணையராக பொறுப்பேற்று, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி நகராட்சிப் பொறியாளரால் திறக்கப்பட்டது. ஆனால், அன்றைய தினமே ஒப்பந்தப்புள்ளி குறித்த சுற்றறிக்கை கூடலூர் நகராட்சியால் பெறப்பட்டதால், 05.04.2022 அன்று நகராட்சி ஆணையாளரால் பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அறிவிப்பும், 11.04.2022 அன்று பொதுநிதியின் கீழ் 27.11.2021–ல் வழங்கப்பட்ட பணி ஆணைகள் இரத்து செய்யப்பட்டது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இதுகுறித்த வழக்கு ஒன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் கட்டப்பட்ட கட்டடம், உட்கட்டமைப்பு இடைவெளி நிதியின் மூலம் (Infra Gap Filling Fund) கட்டப்பட்டது என்றும் இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த அறிவிப்புகளின் நகல்கள், ஒப்புகை அட்டை, ஒப்பந்தம் ரத்து செய்தது தொடர்பான அறிவிப்பு, நிர்வாக அனுமதி ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு கூடலூர் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேலாளர் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர், கூடலூர் நகராட்சியில் ரூ.3.62 கோடி மதிப்பீட்டிலான 62 வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரைமுறைகள் பின்பற்றப்படாமல் முறைகேடாக வெளியிடப்பட்டது என புகாராக தனது மனுவில் தெரிவித்து, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

நகராட்சி பொது நிதியிலிருந்து மூலதனப் பணிகள் செயல்படுத்த பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து 20.09.2021 நாளிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் சுற்றறிக்கையில் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:–

(i) நகராட்சி நிர்வாக இயக்குநரின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

(ii) மதிப்பீடுகளை பிரிக்காமல் ஒரே மதிப்பீடாக தயார் செய்து, உரிய நிர்வாக அனுமதியும்/ தொழில்நுட்ப அனுமதியும் பெற வேண்டும்.

(iii) மூலதனப் பணிகளின் மதிப்பீடுகளை நகராட்சி மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்றபின்பு, நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஒப்புதலும் பெற்ற பின்னரே ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும்.

கூடலூர் நகராட்சியில் பொது நிதி 2021–22ல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சாலைகள் அமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ரூ.216.40 இலட்சம் மதிப்பிலான பணிக்கு நகராட்சி நிர்வாகத்தால் ஒப்பந்தப்புள்ளி 08.11.2022 அன்று கோரப்பட்டு 23.11.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கால அளவான 15 நாட்களுக்கு பின் திறக்கப்பட்டிருப்பினும் ஒரே பணியாக மதிப்பிடாமல், இப்பணியினை 63 பணிகளாகப் பிரித்தும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் 20.9.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநரின் முன் அனுமதி, நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி மற்றும் நகராட்சியின் அதிகாரம் பெற்றவரால் நடத்தப்படும் நகராட்சி மன்றத்தின் ஒப்புதல் இவற்றினுள் எதனையும் பெறாமல் நகராட்சி நிர்வாகத்தால் விதிகளுக்கு புறம்பாக ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று உள்ளது ஆவணங்களின் மூலம் கண்கூடாக தெரிகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக புகார் மனு வரபெற்றதும், அவசரகதியில் நகராட்சி ஆணையர் 05.04.2022 நாளிட்ட அறிவிப்பில் பொது நிதியில் பணிகள் தொடர்வதை தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளதும், அதனை தொடர்ந்து 11.04.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில், மேற்படி ஒப்பந்தப்புள்ளி பணிகளை இரத்து செய்து உத்தரவிட்ட கூடலூர் நகராட்சி ஆணையரின் செயலானது தன்னிச்சையாக தனது அதிகார வரம்பு மீறியும் செயல்பட்டிருப்பது தெளிவாகிறது. மேலும் ஒப்பந்தப்பணிகளை ரத்து செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து உரிய தெளிவுரையோ, அறிவுரையோ பெறப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் 20.09.2021 நாளிட்ட சுற்றறிக்கையில் வெ்ளியிடப்பட்ட அறிவுரைகள் பின்பற்றப்படாமல் 63 பணிகளுக்கு முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணைகள் கூடலூர் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து திரு. M.K.. நசுரிதீன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (W.P.No.25758/2021) தொடுக்கப்பட்டு, இடைக்கால தடை ஆணையும் பெறப்பட்டுள்ளது. இவ்வழக்கு தற்பொழுது நிலுவையில் உள்ளது என்பதும் தெரியவருகிறது.

அதே போன்று, 15–வது மத்திய நிதிக்குழு திட்டம் 2021–22ன் கீழ் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கிணறு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கும், நுண்ணுயிர் உரக்கிடங்கு பகுதியில் தண்ணீர் விநியோகம், சாலை அமைப்பு, தடுப்பு சுவர் கட்டுதல் போன்ற பணிகளை ரூ.257.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு, அவசர அவசியம் கருதி ஒப்பந்தப் புள்ளிகள் 12.11.2021 அன்று கோரப்பட்டு 23.11.2021 அன்று திறக்கப்பட்டு பணிகள் மேற்கொண்டதன் மூலம், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன் படி, குறைந்தபட்சம் 15 நாட்கள் காலக்கெடு அளிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படை விதியினை பின்பற்றாமல், மிகக் குறுகிய காலக்கெடுவிற்குள் ஒப்பந்தப்புள்ளி முடிக்கப்பட்ட செயலானது நகராட்சி நிர்வாகத்தின் பணிகளில் விதிகளை மீறி செயல்படும் அதிகாரிகளின் அலட்சிய போக்கினை காட்டுகிறது. மேலும் வாய்மொழி உத்தரவின் மூலம் குறுகிய காலக்கெடு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என கூறுவது ஏற்புடைய செயல் அல்ல. விதிகளை மீறிய செயல். உயர்நீதிமன்றத்தால் கண்டனம் (adverse remarks) அளிக்க வாய்ப்புள்ளது.

மேலும் உள்கட்டமைப்பு இடைவெளி நிதி 2016–17 (Infrastructure Gap Filling Fund) ன் கீழ் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டதில், கட்டடம் கட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி 2016ஆம் ஆண்டில் பெறப்பட்டும், இதற்கான பணி ஆணையானது (Work order) 23.07.2020ல் Hamson builders ஒப்பந்ததாரருக்கு

வழங்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டு கால தாமதத்திற்கான காரணங்கள் எதையும் விசாரணையில் அதிகாரிகள் சமர்ப்பிக்கவில்லை.

மனுதாரரின் புகார் மீதான விரிவான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 05.05.2022 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதம் வாயிலாக நகராட்சி ஆணையரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டும் இதுவரை அறிக்கை அனுப்பப்படாத ஆணையாளரின் செயலை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

எனவே, மேற்கண்ட புகார்கள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து அனைத்து கோப்புகளையும் ஆராய்ந்தும், விசாரணை மேற்கொண்டும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி பணிகளில் வேறு ஏதேனும் விதிமீறல்கள் நடந்துள்ளதா என்பதை கண்டறிந்து குழுவின் அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் பெற்று உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இவ்வாறு தன்னிச்சையாக செயல்படும் நகராட்சி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

Severe disciplinary action is ordered to be launched against the Municipal Commissioners, Engineers and other officials involved in this improper tender episode conducted with a number of illegalities.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P.B. சிபி,
   எண்.4/174, கூடலூர்,
   ராஜகோபாலபுரம், கூடலூர், நீலகிரி மாவட்டம் – 643212.
2. நகராட்சி பொறியாளர்,
   கூடலூர் நகராட்சி, நீலகிரி மாவட்டம்– 643212.
3. பொதுப்பணி மேலாளர்,
   கூடலூர் நகராட்சி, நீலகிரி மாவட்டம்– 643212.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/06/22

செயலாளர்.

06/06/22